### ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாக மாறி

# அ.தி.மு.க. - பா.ஜ.க.வின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு தக்க பதிலடி தாரீர்!

## திருப்பத்தூரில் சமூக வலைதளச் செயற்பாட்டாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**திருப்பத்தூர், ஜூலை 19 - “ஒவ்வொருவரும் ஒரு ஊடகமாக மாறி அ.தி.மு.க. - பா.ஜ.க.வின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு தக்க பதிலடி தாரீர்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருப்பத்தூரில் நடைபெற்ற சமூக வலைதளச் செயற்பாட்டாளர்கள் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.**

திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, சட்டமன்றத் தொகுதிக்களுக்கு உட்பட்ட சமூக வலைதளச் செயற்பாட்டாளர்கள், ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

திருப்பத்தூர் மாவட்டத்திலே, இன்று பல்வேறு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருந்தாலும், இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு கழகத்தினுடைய இருவண்ணக் கொடியை, கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு 100 அடி உயரத்தில் இருவண்ணக் கொடியை ஏற்ற வாய்ப்பளித்த, மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், கழகத்தினருக்கும் எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் பிறகு, இந்த மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் இருந்தாலும், மிக மிக முக்கியமானது, இந்த சமூக வலைதள தன்னார்வலர்களுடைய கூட்டம்.

நம்முடைய அமைச்சர் அண்ணன் வேலு அவர்கள் பேசும்போது சொன்னார்கள், கழகத்திலே எத்தனையோ அணிகள் இருந்தாலும், இந்த ஐ.டி. விங் தகவல் தொழில்நுட்ப அணி எவ்வளவு மிக மிக முக்கியமான அணி, என்பதை இங்கு எடுத்துரைத்தார்கள். இளைஞர் அணி இருக்கிறது, மகளிர் அணி இருக்கிறது, மாணவர் அணி இருக்கிறது, பொறியாளர் அணி இருக்கிறது எத்தனையோ அணிகள் 19 அணிகள் இருக்கின்றன. ஆனால், இந்த அத்தனை அணிகளுக்கும் இல்லாத சிறப்பு ஒன்று உண்டு என்றால், இந்த ஐ.டி. விங் தகவல் தொழில்நுட்ப அணிதான்.

இங்கே, இவர் சொன்னதைப் போல, நான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இங்கு இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள், மற்ற அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களெல்லாம் பல்வேறு அணிகளில் இருந்தாலும், அவர்கள் அத்தனை பேரும் மிகவும் ஆக்ட்டீவாக இருப்பதென்றால், அது, இந்த தகவல் தொழில்நுட்ப அணிதான். அந்தத் தகவல் தொழில்நுட்ப அணியில் இல்லாதவர்கள்கூட இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளீர்கள். உங்கள் அத்தனைப் பேருக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத் தேர்தலின்போது எனது பிரச்சார நிகழ்ச்சியின்போது உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். நாங்களெல்லாம் களத்தில் பிரச்சாரத்தை மேற்கொண்டோம், நீங்கள் களத்திலும், சமூக வலைதளத்திலும் பிரச்சாரம் செய்தீர்கள். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே அமர்வதற்கு, நம்முடைய தலைவர் அவர்களை, முதலமைச்சர் இருக்கையில் உட்கார வைத்ததற்கு மிக மிக முக்கியமான காரணம் என்றால், அது நீங்கள் களத்தில் ஆற்றிய, சமூக வலைதளத்தில் ஆற்றிய பணிகள் தான்.

**கொரோனா ஒழிப்பு மகத்தான பணி!**

அதற்காக உங்களுக்கெல்லாம் ஒரு நன்றியைச் சொல்லி, நமக்குள்ளே ஒரு இடைவெளியை வளர்த்துக்கொள்ள, உருவாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை. உங்களுக்கெல்லாம் தெரியும். நாம் ஆட்சியில் பொறுப்பேற்கும்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அந்த பொறுப்பை ஏற்கும்போது எப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை இருந்ததென்று. கொரோனா இரண்டாவது அலை வேகம் எடுத்தது. அப்போது, மிகவும் சாமர்த்தியமாகக் கட்டுப்படுத்துவது என்பது ஒரு மிகப்பெரிய சவாலாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு அமைந்தது.

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி, அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என ஒவ்வொருவரும் கொரோனா ஒழிப்புப் பணிகளை மேற்கொண்டு தடுப்பூசியின் துணையோடு கொரோனாவை ஒழித்தோம். அதன் பிறகு, சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராக என்னுடைய சட்டமன்றப் பணிகளைச் செய்துக்கொண்டிருந்தேன். முதலமைச்சர் அவர்களின் கட்டளையை ஏற்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையினுடைய அமைச்சராக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறேன்.

**சிறப்பாகப் பணியாற்றுகிறீர்கள்!**

இந்த சூழ்நிலையில்தான், தற்போது உங்களையெல்லாம் சந்திக்க, நான் வந்திருக்கின்றேன். உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசும்போது, சொன்னார்கள் நான் உங்களுக்கெல்லாம் அறிவுரைக்கூறப் போகிறேன் என்று. இன்னும் சொல்லப்போனால், நீங்கள்தான் எங்களுக்கு அறிவுரை கூறவேண்டும். ஏனென்றால், சமூக வலைதளங்களில் இருக்கின்ற பிரச்சினைகளை நீங்கள்தான் சவாலாக ஏற்று, அதற்கெல்லாம் பதில்களை தந்து கொண்டு இருக்கீறீர்கள்.

சமூக வலைதளம் என்பது இன்றைக்கு ஒரு மிக மிக முக்கியமான தளமாக உள்ளது. முன்பெல்லாம் களம், சமூக வலைதளம் என்று இரண்டாய பிரித்து பேசுவோம். ஆனால், இன்று அப்படியில்லை இரண்டும் ஒன்றாகிவிட்டது. களத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக சமூக வலைதளப் பக்கங்கள் உள்ளன. பல நேரங்களில் சமூக வலைதளமும் ஒரு களம்தான் என்ற அளவிற்கு இன்று நிலைமை மாறியிருக்கிறது. அதனால்தான், இடைவிடாத பணிகளுக்கு நடுவே உங்களையெல்லாம் சந்தித்து, உற்சாகப்படுத்த வேண்டும். பல்வேறு கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

உங்களில் பலரைக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நானே பர்சனலாக என்னுடைய அக்கவுண்டில் இருந்து ஃபாலோவ் செய்கிறேன். உங்களுடைய பதிவுகளையெல்லாம் நான் படிக்கின்றேன். நிறையபேர் இங்கு மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டு வந்துள்ளீர்கள் அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

முதலமைச்சர் ஆகட்டும், நான் ஆகட்டும், கழக முன்னோடிகள் போடுகின்ற அனைத்து பதிவுகளையும் எடுத்து பகிர்ந்து எடுத்துச் சொல்கிறீர்கள். பாசிட்டிவான கமெண்ட்ஸ்களைப் போடுகிறீர்கள்.

யாராவது சங்கிகளோ, அடிமைகளோ வந்து நெகட்டீவ்வாக கமெண்ட் செய்யும்போது ஆதாரத்துடன் அதற்கு தக்க பதிலடிக் கொடுத்துக்கொண்டு வருகிறீர்கள். ஆனால், நாம் இன்னும் விரைவாகச் செயல்படக்கூடிய கட்டாய நேரம் உருவாகிக்கொண்டுள்ளது.

நாம் பதில் மட்டுமே சொல்லிக் கொண்டு இருக்கக்கூடாது. கேள்விகளையும் நாம் கேட்க வேண்டும். இன்றைக்கு சட்டமன்றத் தேர்தல் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டன. நாம் ஆட்சியில் இருக்கின்றோம், எனக்குத் தெரியும், எதிர்கட்சியில் இருக்கும்போது சமூக வலைதளங்களில் பணியாற்றுவது மிக சுலபம். ஆனால், ஆளும் கட்சியாக இருக்கும்போது சமூக வலைதளங்களில் பணியாற்றுவது கொஞ்சம் கடினமான விஷயம்தான். ஆனால், நீங்கள் சிறப்பாக செய்து வருகிறீர்கள். குறிப்பாக, இந்த இரண்டு ஆண்டுகளில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் மக்களிடத்திலே நீங்கள்தான் போய் சேர்த்துக்கொண்டுள்ளீர்கள்.

**பணியில் இன்னும் வேகம் வேண்டும்!**

மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து , மக்களைத்தேடி மருத்துவம், இல்லம்தேடி கல்வி, புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டம் என ஆட்சி அமைத்த நாள் முதல் இன்று வரை ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணியை நீங்கள் செய்து வருகிறீர்கள். ஆனால், அது பத்தாது, அந்தப் பணி இன்னும் வேகமாக, இன்னும் சிறப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்.




## ஒன்றிய அரசின் மிரட்டல்களுக்கு எங்கள் தலைவர் ஒருபோதும் அஞ்சமாட்டார்!

இதோ அடுத்து, மிக மிக முக்கியமான ஒரு திட்டம் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்’ நம்முடைய தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியிலே சொன்னதைப் போல, கலைஞருடைய நூற்றாண்டிலே கலைஞர் பெயரிலே ஒரு திட்டம், அதுவும் அண்ணாவுடைய பிறந்த நாள் செப்டம்பர் 15ஆம் தேதி அன்று அந்தத் திட்டம் நிறைவேற இருக்கின்றது. ‘தேவையுள்ள ஒரு மகளிர்கூட இந்தத் திட்டத்தில் விடுபடக்கூடாது என்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பலமுறை தெளிவாக எடுத்து சொல்லியுள்ளார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றியும் தேவையில்லாத வதந்திகளைப் பரப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

கட்டிட வேலைக்கும் செல்லும் மகளிர், ஒரு வீட்டுக்கு மேல் வீட்டுவேலை செய்யும் பெண், மீன் வியாபாரம் செய்பவர், சாலையோரம் சிறு வணிகம் செய்வோர், விவசாயக் கூலி வேலை செய்யும் பெண்கள் பயனடையும் வண்ணம் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை நீங்கள் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

**காலையில் எழுந்தவுடன் முரசொலியை படிக்க வேண்டும்!**

முதலில், நீங்கள் அனைவரும் காலையில் எழுந்தவுடன், முதல் வேலையாக முரசொலியைப் படிக்க வேண்டும். கழக நிகழ்ச்சிகள், ஒவ்வொரு நிகழ்விலும் கழகம் என்ன மாதிரியான நிலைப்பாட்டை (ஸ்டேண்டு) எடுத்திருக்கிறது என்பதை நீங்கள் முரசொலி மூலம் தெரிந்துகொள்ளலாம்.

ஐன்டீன் மீடியா என்று சொல்லக்கூடிய ஊடகங்கள், 90 சதவிகித ஊடகங்கள் பாரதிய ஜனதா கட்சி நினைப்பதைத்தான் செய்தியாக்குகின்றன. தமிழ்நாட்டில் இருக்கின்ற ஊடகங்களும் இதற்கு விதி விலக்குகளல்ல. எனவே, நாமே இன்றைக்கு ஒரு ஊடகமாகச் செயல்பட வேண்டும், மாற வேண்டும். பா.ஜ.க.வை அ.தி.மு.கவை அம்பலப்படுத்துக்கின்ற ஊடகங்களை நீங்கள் பின்பற்ற வேண்டும். இன்னொரு முக்கியமான பிரச்சினை நம்மைச் சுற்றி பரவுகின்ற ஃபேக் நியூஸ்.

வடமாநிலத் தொழிலாளர்கள், தமிழ்நாட்டில் பாதிக்கப்படுகிறார்கள் என்ற பொய்யாக எங்கோ அமர்ந்துக்கொண்டு ஒரு சங்கி போடுகின்ற ஒரு டிவீட் மிகவும் பரப்பரப்பானது.

**பா.ஜ.க.வின் பொய்யான புரளிகள்!**

அதற்கு, நம்முடைய முதலமைச்சர் வரை பேட்டி கொடுத்து உண்மையை விளக்கினார். பீகார் மாநில அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். தமிழ்நாட்டு அதிகாரிகள், அங்கு சென்று வெளி மாநிலத் தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை என்ற உண்மையைப் புரிய வைத்தனர். அதேபோல், நம்முடைய கழக ஆட்சி அமைந்த பிறகு, 2,000 கோயில்கள் இடிக்கப்பட்டதாக பா.ஜ.க. வைச் சேர்ந்த இன்னொருவர் பொய்யான ஒரு புரளியைப் பரப்பிக் கொண்டுள்ளார்.

எப்போதுமே, உண்மையைவிட பொய் வேகமாக மக்களைச் சென்றடையும். அது உங்களுக்கு நன்றாகவே தெரியும். ஊழல் பட்டியல் வெளியிடுகிறேன் என்று ஒரு நபர் போலி சொத்துப் பட்டியலை வெளியிட்டார். அதை சமூக ஊடகங்கள் மட்டுமின்ற பிரதான ஊடகங்களும் பெரிய செய்தி ஆக்கின.

**கைது நடவடிக்கை தொடரும்!**

இப்படி, சங்கிகளும் அவர்களின் அடிமைகளும் பரப்புகின்ற பொய்ச் செய்திகளுக்கு நாம் பதில் சொல்லிக் கொண்டே இருக்கின்றோம். இன்னும் ஏன் உங்களுக்கெல்லாம் ஒரு குறை இருந்தது, எனக்கு தெரியும், இந்தப் பொய்ச் செய்தியை பரப்புகிறார்வர்களெல்லாம் ஏன் வழக்கு போட்டு கைது செய்ய மாட்டேன் என்கிறீர்கள் என்ற குறை உங்களிடத்திலே இருந்தது. ஆனால், கடந்த மூன்று மாத காலமாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பொய்ச் செய்தி பரப்புகிறவர்கள் கைது செய்யப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கைது நடவடிக்கை கண்டிப்பாக தொடரும்.

ஃபேக் நியூஸ் வரும்போது அவற்றை நீங்களும் கவனமாக கையாள வேண்டும். அவதூறாக இருந்தாலும் சரி, பாராட்டாக இருந்தாலும் சரி, அது சரியா தவறா என்பதை நீங்களும் ஆராய வேண்டும். அதன் உண்மைத் தன்மையை ஆய்வு செய்தததற்கு பிறகு தான் அதை நீங்கள் பதிவிட வேண்டும்.

இன்றைக்கு விலைவாசி விண்ணை முட்டிக்கொண்டிருக்கிறது. அதற்கான காரணம், பணவீக்கம், பணவீக்கம் என்பது ஒன்றிய அரசு பா.ஜ.கவினுடைய ஒன்றிய அரசினுடைய தவறு. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் செய்த தவறு போல பழிசுமத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கெல்லாம் நீங்கள் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். நாங்கள், ஆட்சிக்கு வந்தால் 15 இலட்சம் தருவேன் என்று சொல்லிவிட்டு, இப்போது 15 ரூபாய் கூட கொடுக்கவில்லை. ஆனால், அப்படி நான் சொல்லவே இல்லை என்று நம் மீதே திருப்புகிறார்கள்.

**மன்னிப்பு கேட்க மாட்டேன்!**

அதைத் தொடர்ந்து பா.ஜ.கவைச் சேர்ந்தவர்களெல்லாம் சொல்லிக் கொண்டுள்ளார்கள். உதயநிதி மன்னிப்பு கேட்கவேண்டுமென்று... நான் மன்னிப்பு எல்லாம் கேட்கமாட்டேன். நான் இன்றும் சொல்கின்றேன் மோடி அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது சொன்னது உண்மை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும்... 1,000 ரூபாய் நோட்டு, 500 ரூபாய் நோட்டு எல்லாம் செல்லாது என்று சொன்னார்.

கேள்வி கேட்டதற்கு என்ன சொன்னார், கருப்புப் பணமெல்லாம் நான் மீட்க போறேன், மீட்டு ஒவ்வொருவரின் அக்கவுண்டிலும் 15 இலட்சம் ரூபாய் டெபாசிட் செய்யப்போறேன் என்று சொன்னதுமோடி அவர்கள். எங்கே சொன்னார் என்று நான் ஆதாரத்தோடு சொல்கிறேன்.

2013ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி சத்தீஸ்கர் மாநிலம், காந்தர் என்ற இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொதுக்கூட்டத்தில்தான் நமது ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் அப்போது பேசினார்கள். அதுமட்டுமல்ல, மோடி அவர்களுடைய நெருங்கிய நண்பர் ஒருத்தர் இருக்கிறார். அவருடைய பெயர் அதானி. இந்தியாவில் இருக்கக்கூடிய அத்தனைப் பொதுத்துறையையும் தூக்கி அதானி கையில் கொடுத்தாச்சு. ஏன், ஒன்றிய பிரதமர் மோடி அவருடைய நெருங்கிய நண்பர் என்கிற ஒரே காரணத்திற்காக. உலக பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்தார்.

**அதானியின் வளர்ச்சி!**

கின்டன்பெர்க் என்ற அமெரிக்க நிறுவனம் செய்தி வெளியிட்டது எப்படி இந்த நிறுவனம் கடந்த 9 ஆண்டுகளில், இப்படி வளர்ச்சி அடைந்தது என்று ஒரு செய்தி வெளியிட்டார்கள். அதற்கு பிறகு, அதானியினுடைய சொத்துப்பட்டியல் சரிய ஆரம்பித்தது. 2வது இடத்திலிருந்து இப்போது 28வது இடத்திற்கு வந்துள்ளார். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன் மோடி அவர்கள் எந்த வெளிநாட்டிற்கு சென்றாலும், அவர் கூட போவது அதானி அவர்கள், அவர் போவதே சில நேரம் அதானியினுடைய விமானத்தில் தான்.

அதானி ஏர்போர்ட் வந்திடுச்சு, அதானி இரயில்வே ஸ்டேசன் வந்துடுச்சு, அதானி போர்ட் வந்துடுச்சு, அதானி ரோடு வந்துடுச்சு, அதானி துறைமுகம் வந்துடுச்சு இப்படி அத்துனை பொதுத்துறையையும் கொண்டு அதானியிடம் கொடுத்திருக்கிறார். இதையெல்லாம் நாம் பேச வேண்டும், அதேபோல கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன் 12 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்று சொன்னார்கள் 10 வருடத்திற்கு முன்பு. ஆனால், 5 இலட்சம் பேருக்குக் கூட வேலைவாய்ப்பை ஏற்படுத்தவில்லை இந்த ஒன்றிய பா.ஜ.க அரசு.

**பி.எம்.கேர் பண்ட் என்ன ஆனது?**

மிக மிக முக்கியமான ஒரு விஷயம் கொரோனா காலத்தின் போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நானே பல்வேறு இடங்களில் முதலமைச்சர் நிவாரண நிதி என்று கொடுத்தார்கள். ஆனால் ஒன்றிய அரசு மோடி அவர்கள் ஒரு வேலை பண்ணுனாரு, பி.எம் கேர் பண்ட் என்று ஒன்று ஆரம்பித்தார்கள். உங்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும் எல்லா கார்ப்பரேட்டுக்கும் சென்று காசு கொடுத்தார்கள், ஆனால், கொரோனா நோயாளிகளை கேர் செய்வதாக சொல்லி, அரசு நிறுவனம் என்று எல்லோரும் பணம் வசூல் செய்தார்கள். கிட்டத்தட்ட 32 ஆயிரம் கோடி என்ன ஆனது என்று இன்னும் தெரியவில்லை. பி.எம். கேர் பண்ட்டில் வாங்கிய 32 ஆயிரம் கோடிக்கு இன்னும் பதில் இல்லை.

RTI மூலம் ஒன்றிய அரசிடம் கேட்டால், அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நீதிமன்றத்திற்குப் போனால் ஒன்றிய அரசுக்கும் பி.எம்.கேர் பண்டுக்கும் தொடர்பே இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நன்கொடை மட்டும் ஒன்றிய அரசின் இணையதளத்தின் மூலமாகத்தான் அவர்கள் பெற்றுக் கொண்டு வந்தார்கள்.

யாருக்காக இந்த பி.எம் கேர் பண்டை செலவழித்தார்கள் என்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை. நாம்கூட இப்போது சமீபத்திலே தமிழ்நாடு சாம்பியன்ஸ் பண்ட் என்ற திட்டத்தை ஆரம்பித்து, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நலிவடைந்த ஸ்போர்ட்ஸ் வீரர்களுக்கு தேவையான விளையாட்டு வசதிகளையெல்லாம் செய்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், வெளிப்படைத்தன்மையுடன் செய்கிறோம்.

முதலில் ஒரு அறக்கட்டளையை ஆரம்பித்து பணம் வாங்குகிறார்கள் என்றால், அதில் ஒரு வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். பி.எம் கேர் பண்டைப் பற்றி நாம் பேச வேண்டும். கொரோனாவில் கூட கொள்ளையடித்த ஆட்சி என்றால், அது நம் ஒன்றிய பா.ஜ.க ஆட்சியும், அதனுடைய அடிமை அ.தி.மு.க ஆட்சியும்தான். இப்பொழுதுகூட நம்முடைய ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும். பாரீஸில் இருக்கிறார். அங்கு இருக்கக்கூடிய ஐ.நா மன்றத்திலே ஒரு கூட்டம்

மணிப்பூர் என்ற ஒரு மாநிலம் கடந்த மூன்று மாதங்களாக பற்றி எரிந்துக்கொண்டுள்ளது. கிட்டத்தட்ட 150 பேர் இறந்திருக்கிறார்கள். ஆனால், அதைப்பற்றியெல்லாம் அவர் கவலைப்படவில்லை. மோடி அவர்கள் பாரீஸ் சென்றிருக்கிறார். ஐ.நா மன்றக் கூட்டத்தில் இதைக் கண்டித்து ஒரு தீர்மானம் கூட நிறைவேற்றப்படவில்லை. இப்படி ஏராளமான விஷயங்களை, சமூக வலைதளத்திலே எடுத்துரைக்க வேண்டும்.

**கழகத்தின் முன் கள வீரர்களாகத் திகழ்வீர்!**

அ.தி.மு.கவினர் களத்தில் தனித்தனியாகப் பிரிந்தாலும், சமூக வலைதளத்தில் நாம் எதிர்க்க வேண்டும் என்றால், அவர்கள் அத்தனைப்பேரும் ஓரணியில் திரள்கின்றனர். அவர்களைப்பற்றி பேசுவதென்றால், கண்டெண்ட்டுக்கு பஞ்சமே இருக்காது உங்களுக்கே தெரியும். எனவே, சமூக வலைதளங்களில் செயல்படக் கூடிய நீங்கள், கழகத்தின் முன் கள வீரர்களாக சிறப்பாக் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கழகத்தைப் பற்றிய அவதூறுகளை முறியடிக்கும் அதேவேளையில் எதிரணியினர் செய்கின்ற சீர்கேடுகளையும், நீங்கள் மக்களிடத்தில் அம்பலப்படுத்த வேண்டும். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கின்றேன். உங்களுடனே நான் பயணிப்பேன். உங்களுக்கு ஆதரவாக என்றென்றும் நிற்பேன். நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களும் என்றென்றும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார். உங்களுக்கான அங்கீகாரம் சரியான நேரத்தில் உங்களைத் தேடி வரும். அதனால், உற்சாகத்துடன் பணியாற்றுங்கள். நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கின்றது.

**அ.தி.மு.க. - பா.ஜ.க.வில் பல அணிகள்!**

‘நாடும் நமதே, நாற்பதும் நமதே’, என்பதை மனதில் வைத்து நீங்கள் பணியாற்ற வேண்டும். தி.மு.கவில் அணிகள் பல இருக்கின்றன. இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி அதே போல் அ.தி.மு.க.விலும் அணிகள் இருக்கின்றன ஓ.பி.எஸ் அணி, ஈ.பி.எஸ் அணி, சசிகலா அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவினுடைய டிரைவர் அணி இப்படி ஏகப்பட்ட அணிகள் இருக்கின்றன.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அணிகள் எப்போதுமே சிறப்பாக செயல்படக்கூடிய அணிகள். அதேபோல் அ.தி.மு.க அணிகள் தேர்தல் நேரத்தில் மட்டும் வந்து செயல்படுவார்கள். அதேபோல், பா.ஜ.கவிலும் நிறைய அணிகள் இருக்கின்றனது. ஈ, டி அணி, சி.பி.ஐ. அணி, ஐ,டி அணி இவர்களெல்லாம் இங்கே ஒரு 4, 5 மாதங்களாக தேர்தல் வரவிருக்கின்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் நம் தலைவர்களையெல்லாம் மிரட்டிப் பார்க்கலாம் என்ற நப்பாசையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் இப்போது சொல்கின்றேன், நம்முடைய தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம்முடைய ஒன்றிய பிரதமர் மோடி அவர்களைப் பார்த்து, எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பி.எஸ் மாதிரி, உங்களைப் பார்த்து பயப்படுகிறவர்கள் நாங்கள் கிடையாது.

நாங்கள் கலைஞருடைய வளர்ப்பு. இன்று காலைகூட நம்முடைய அமைச்சர் ஒருவருடைய வீட்டில் அமலாக்கத்துறையினர் ரெய்டு நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நம்முடைய தலைவர் பெங்களூரு சென்றிருக்கிறார். பெங்களூரிலே இரண்டு நாள் மிகப்பெரிய மாநாடு. எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒருங்கிணைக்கின்ற மாநாடு. எங்களுடைய தலைவர் உங்களைப் பார்த்து அஞ்சமாட்டார், நாங்கள் இல்லை எங்களுடைய கழகத்தினுடைய ஒரு கிளைச்செய லாளர் கூட உங்கள் ஒன்றிய அரசைப் பார்த்து பயப்பட மாட்டோம்

எப்படி 2021 ஆம் ஆண்டு தேர்தலில் அடிமைகளை ஒழித்தோமோ அதேபோல் வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அடிமைகளையும், எஜமானர்கள் பா.ஜ.க அரசையும் வீட்டிற்கு அனுப்புவோம் என்று கூறிக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.